மொத்தத்தில் இந்த நிதிநிலை அறிக்கையைப் பொறுத்தவரையிலே, பழைய கள்ளு புதிய மொந்தையிலே என்று கிராமத்தில் ஒரு பழமொழி சொல்வார்கள். இது அதுபோல் இருக்கின்றது என்று கூறி, வாய்ப்பிற்கு நன்றிகூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை (17-8-2021), செவ்வாய்க்கிழமை காலை 10-00 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-55 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

5. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

(அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

1. 28-5-2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம்-II, பிரிவு 2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/348 (0-1)/2020 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தம் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் 17-12-2020 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 186-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கபெற்றது.]

2. அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்குட்பட்டு யாதொரு பதிவுபெற்ற நபரும் 13-4-2020 ஆம் நாளிட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் அறிவிக்கை எண் II(2)/வவப/232(h)/2020-ல் வெளியிடப்பட்டுள்ள விதித்துறைகளுக்கு இணக்கமாக இல்லாததன் காரணமாக 1-12-2020 ஆம் நாள் முதல் 31-3-2021 வரையிலான இடைப்பட்ட காலத்திற்கு செலுத்த வேண்டிய தண்டத்தொகையை இரத்து செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் 2-12-2020 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 181-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கபெற்றது.]

2021 ஆகஸ்ட் 16]

3. (i) அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகள் மற்றும் வரையறைகளுக்குட்பட்டு ஒவ்வொரு காலாண்டிற்கும் விவர அறிக்கையை அளிப்பதற்கு விருப்புரிமை தெரிவித்து முந்தைய நிதியாண்டில் 5 கோடி ரூபாய் வரை விற்றுமுதல் கொண்ட பதிவுபெற்ற நபர்கள் 2021 ஆம் ஆண்டு ஜனவரி திங்கள் முதல் ஒவ்வொரு காலாண்டிற்கான கணக்கு விவர அறிக்கையை அளித்து ஒவ்வொரு மாதத்திற்குமான பாக்கியை செலுத்தும் நபர்களின் வகையினராக அறிவித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் 16-11-2020 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 171-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை; (ii) ஒவ்வொரு காலாண்டிற்கு அல்லது அதன் பகுதிக்கு கணக்கு விவர அறிக்கையினை தாக்கல் செய்வதற்கு விருப்புரிமை தெரிவித்துள்ள பதிவு பெற்ற நபர்களை, காலாண்டின் முதல் மாதத்தில் அல்லது இரண்டாவது மாதத்தில் அல்லது அவ்விரண்டு மாதங்களிலும் சிறப்பு நடைமுறையை பின்பற்றக்கூடிய வகையினராக அறிவித்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் 16-11-2020 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 172-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் (iii) 13-4-2020 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டின் பாகம்-II, பிரிவு-2-ல் வெளியிடப்பட்ட வணிக வரி மற்றும் பதிவுத் துறையின் II(2)/வவப/232(h-5)/2020 ஆம் எண் அறிவிக்கைக்கு திருத்தங்கள் செய்தது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் 16-11-2020 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 173-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கபெற்றன.]

4. (i) 2020 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (பதினான்காவது திருத்தம்) விதிகளை இயற்றியது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் 23-12-2020 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 191-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை மற்றும் (ii) 2021 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரி (முதல் திருத்தம்) விதிகளை இயற்றியது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (B1) துறையின் 4-1-2021 ஆம் நாளிட்ட அரசாணை (நிலை) எண் 1-ல் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [2017 ஆம் ஆண்டு தமிழ்நாடு சரக்குகள் மற்றும் சேவைகள் வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 19/2017) 166 பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கபெற்றன.]